# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## EP.No.28/2023

PW1–ராஜேஷ்குமார் நாள்.03.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

எங்கள் தலைமைஅலுவலகம் கேரளாவில் உள்ள வாழப்பாடுவில் உள்ளது. அதனுடைய கிளை அலுவலகம் பெரம்பலூரில் உள்ளது. 1ம் எதிர்மனுதாரர் எங்கள் பெரம்பலூர் கிளையில் கடன்வாங்கினார். பெரம்பலூரில் வாங்கிய கடனுக்கு திருச்சூரில் தீர்ப்பாயத்தில் நாங்கள் பெற்ற உத்தரவு செல்லாது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு முறையாக அறிவிப்பு எதுவும் அனுப்பாமல் திருச்சூரில் ஒருதலைப்பட்சமாக உத்தரவு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. ரூ.10,49,000/–த்தை கடனாக 30.04.2019 ல் எதிர்மனுதார் வாங்கினார். ஒருமாத தவணை ரூ.39,650/–ஆகும். சுமார் 8, 9 தவணைகள் செலுத்தியுள்ளார்கள். அதன்பின்னர் கொரானா காலகட்டம் வந்தது என்றால் சரிதான். அதனால் தான் எதிர்மனுதார்களால் முறையாக தவணை தொகை செலுத்தமுடியவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் தவணை தொகை செலுத்ததால் அவருடைய வாகனத்தை ஏலம் விட்டோம் என்றால், அவர் ஒப்படைத்தால் ஏலம் விட்டோம். அவர் ஒப்படைத்தற்கு எங்கள் நிறுவனம் தரப்பில் ரசீது எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கொடுத்திருப்பார்கள். ஏலம் விட்டபின்னர் ஏலத்தொகை எவ்வளவு மற்றும் பாக்கி எவ்வளவு என்பது குறித்து எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. வாகனத்தை எதிர்மனுதாரர் ஒப்படைக்கவில்லை என்றும், நாங்களாக எடுத்துசென்றோம் என்றும், அதன்பின்னர் கணக்கு சரியாகிவிட்டது என்று அவரிடம் சொன்னோம் என்றால் சரியல்ல. ஏலத்திற்குபின்னர் எதிர்மனுதாரருக்கு எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பெரம்பலூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். அந்தபுகாரின் விசாரணையில் ஏற்கனவே வாகனத்தை எடுத்துசென்றுவிட்டதால் கணக்கு சரியாகிவிட்டது என்றும், எதிர்மனுதாரர்கள் பணம் கொடுக்கதேவையில்லை என்று முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ரூ.17,19,440/–த்திற்கு தீர்ப்பாகியுள்ளது. எதிர்மனுதாரர் செலுத்திய தொகை,

ஏலம்விட்ட தொகை ஆகியவற்றை முறையாக நாங்கள் வரவு வைக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் வாங்கிய கடன் தொகைக்கு தீர்ப்புபெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்களிடம் அசையும் மற்றும் அசையா சொத்து எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. அன்றாட ஜீவனத்திற்கு வருமானம் இல்லாமல் எதிர்மனுதார்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எந்தவேலைக்கு செல்லாத முடியாத ஒரு மாற்றுத்திறனாளி என்றால் சரியல்ல. நிறைவேறுதல் மனுவில் கண்ட தொகையை செலுத்த எதிர்மனுதாரருக்கு எந்த வசதி மற்றும் வருமானம் கிடையாது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தை ஏமாற்றி கட்டிய தொகையை முறையாக வரவு வைக்காமல் அதிகார வரம்பு இல்லாத தீர்ப்பாயத்தில் தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. கடன் கொடுத்த இடத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தால் எதிர்மனுதார் ஆஜராகி எதிர்மனுதார் ஏற்கனவே செலுத்திய தொகை மற்றும் ஏலம் போன தொகை குறித்து கூறி கணக்கை நேர்செய்த விவரத்தையும் சொல்லியிருப்பார் என்றும், அதற்கான வாய்ப்பை கொடுக்காமல் நாங்கள் தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.